## செப்டம்பர் - 11

**"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப்பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்."** **- லூக்** 14 : 27

பிரதிகூலமான நிலைமையின் மத்தியில் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் கர்த்தர் சிலுவையைச் சுமந்தார். நம்முடைய கர்த்தருடைய இந்தப் போக்கு, தங்களைத் தாங்களே தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களிடமிருந்து பொறாமை, வெறுப்பு, பகை, சண்டை, உபத்திரவம் முதலியவற்றை அவர் மேல் கொண்டு வந்தது. ஆனால் அவர்களுடைய இருதயங்களிலிருந்ததை அறிந்தே நமது கர்த்தர் பிசாசானவனே அவர்களுக்குத் தகப்பனாயிருக்கிறான் என்று சொன்னார். நாமும் நமது கர்த்தர் நடந்த அதே "நெருக்கமான பாதையில் " நடந்து கொண்டிருந்தால், நம்முடைய சிலுவைகளும் அவருடைய சிலுவைக்கு ஒப்பானதென்று நாம் நியாயமானபடி எதிர்பார்க்கலாம். அதாவது பரலோகத்திலுள்ள நமது பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு எதிர்ப்பு அவருடைய விவகாரத்துக்காக, நாம் ஊழியம் செய்து கொண்டு நமது போதகரும் தலைவரும் கற்பித்தது போல வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்கு எதிர்ப்புகள். இவைகள் நாம் சுமக்கிற சிலுவைகள். - Z ’03, 345 (R 3235)

நமது நடத்தையை தேவனுடைய வார்த்தையின் தத்துவங்களுக்கு உட்படுத்த நாடும்போது நாம் அனுபவிக்க வேண்டிய பொருந்தாத அனுபவங்களையே அந்தச் சிலுவை குறிக்கிறது. " எனக்கு பின் செல்லு" என்ற வார்த்தைகளே இப்படிப்பட்ட நடத்தையை உணர்த்துகிறது. மற்ற எந்த நடத்தையுமல்ல. சாதாரணமான சந்தர்ப்பங்களில் கூட பெரும்பான்மையானோர் இப்படிப்பட்ட நடத்தையை காண்பிக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்ப நிலைகளில் சிறிய சிறுபான்மையோர் இதைச் செய்வார்கள். ஆனால் இயேசுவைப் பின்பற்றுவர்களில் உண்மையாகவே வெகுசிலரே எல்லா நிலைமையிலும் இதைச் செய்வார்கள். சில வேளைகளில் அவர்களுடைய பெலன் கிட்டத்தட்ட அற்றுப்போகும் நிலைவரைக்கும் இது அவர்களுக்கு பாரமாகிறது. ஆம் கர்த்தருடைய விசேஷ உதவி கிடைத்திராதிருந்தால், தங்களுடைய சிலுவையை சுமக்கக் கூடாதவர்களாயிருப்பார்கள். இலவசமாகவும், மகிழ்ச்சியுடனும் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கிறதுமான அவருடைய உதவி விழுவதிலிருந்து அவர்களை பாதுகாத்து அவர்களை சீஷர்களாயிருக்கும் நிலையில் வைத்து பராமரிக்கிறது. - P ’30, 151.

**ஒத்து வாக்கியங்கள்** :-

**மத்** 7:13,14; 8:19,20; 10:37-39; 13:45-47; 16:24; **லூக்** 14:26,28; 18:28-33; **அப்** 20:22-24; **ரோம** 14:1-15; 3; 1**கொரி** 9:25-27; **கலா** 5:16,17,24; 1**பேது** 2:11-16.

**கோபுர வாசிப்பு** : Z ’14, 90 (R 5425).

**வினாக்கள்** : **இந்த வாரத்தில் எனது சிலுவையின் சம்பந்தமாக நான் என்ன செய்தேன்? எப்படிச் செய்தேன்? அதன் பலன் என்ன?**